2020 மார்ச் 17]

சுய நிதிக் கல்லூரிகளில் 4,144 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாவிட்டாலும்கூட, அரசுக் கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1,563 இடங்கள் இன்றைக்குக் காலியாக இருக்கின்றபட்சத்தில், புதியதாக ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மண்ணச்சநல்லூர் தொகுதிக்கு தற்போதைக்குத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள்.

திருமதி மு. பரமேஸ்வரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

111—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

***53308—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோணசமுத்திரம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியம், கோணசமுத்திரம் கிராமத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு திருத்தணி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்

கோரியுள்ளார்கள். புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க குறைந்தபட்சம் 25 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். மேலும் முதன்மை அமைப்பாளரிடமிருந்து உரிய படிவத்தில் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில் 1983 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளுக்கு உட்பட்டு புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு கை கொடுத்து உதவ வேண்டும் என்பதற்காகவும், நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் 1983 ஆம் ஆண்டில் இலவச வேட்டி சேலை திட்டத்தைக் கொண்டு வந்து சரித்திர சாதனை படைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

அதே வழியில், கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம் என அள்ளித் தந்திட்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இரு பெரும் தலைவர்களின் வழியில், கைத்தறி மற்றும் விசைத் தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கு மானியமாக சுமார் 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து விவசாயியாக மட்டுமல்ல, நெசவாளர்களின் ஏந்தலாக, நண்பனாக, தினம் தினம் அற்புதமான திட்டங்களைத் தீட்டி வருகிறார் சேலத்து தங்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் புதியதாக கூட்டுறவுச் சங்கம் தொடங்க பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அனைத்து தகுதிகளும் கோணசமுத்திரம் கிராமத்தில் இருக்கிற நெசவாளர்களுக்கு இருக்கின்றன. சுமார் 100 கைத்தறிகள் அங்கே செயல்பட்டு வருகின்றன. ஒரு கூட்டுறவுச் சங்கம்கூட கோணசமுத்திரம் கிராமத்திலே இல்லை. எனவே, மறு

2020 மார்ச் 17]

பரிசீலனை செய்து கோணசமுத்திரம் கிராமத்தில் விரைவாக ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்க வேண்டும் எனவும், நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில் நெசவாளர்கள் வாழ்கிற பகுதிகளான பொதட்டூர்பேட்டை மற்றும் அம்மையார்குப்பம் ஆகிய பகுதிகளில் அரசு நிலங்கள் இருக்கிற காரணத்தினால், கைத்தறி மற்றும் விசைத்தறி ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள சங்கம் தொடங்குவது குறித்து விதிகளின் அடிப்படையில் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்கிற விவரத்தை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். உரிய விண்ணப்பம் வரப்படுமாயின் உரிய முறைப்படி கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். ஜவுளிப் பூங்கா ஒன்று வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். அரசு என்றைக்குமே நெசவாளர் பெருமக்களுடைய கோரிக்கையை கனிவுடன் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறது. மத்திய அரசு 40 சதவிகிதம் அல்லது 40 கோடி, மாநில அரசு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 9 சதவிகிதம் அல்லது 9 கோடி, ஆக 49 சதவிகித பங்குகளை நிதியுதவியாக மத்திய மாநில அரசுகள் தரத் தயாராகக் காத்திருக்கின்றன. அங்கே பூங்கா அமைத்துத் தர வேண்டும் என்று விண்ணப்பிக்கிறவர்கள், அதனுடைய பயனீட்டாளர்கள் 51 சதவிகித நிதியை சொந்தமாகவோ அல்லது வங்கிக் கடனாகவோ முதலீடு செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் முன்வருவீர்கள் என்று சொன்னால், அதற்குரிய விண்ணப்பத்தினை மாவட்ட ஆட்சியர் மூலமாகத் தருவீர்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிவோடு, கனிவோடு பரிசீலனை செய்து, ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) இன்னொரு கேள்வி இருக்கிறதா? சரி, சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

[2020 மார்ச் 17

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழில் இருக்கிறது. எனவே, அரசுக்கு எவ்வித கடன் பாக்கியுமின்றி, பல விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்படாமல் உள்ளது. இத்தகைய விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விசைத்தறி நெசவாளர்களுக்கு போதிய அளவு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்கள். கடந்த காலத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் விசைத்தறி நெசவாளர் பெருமக்கள், அரசு மூலமாகப் பெற்றிருக்கிற நிதிகளைப் பயன்படுத்தி, உதவிகளைப் பயன்படுத்தி, உரிய முறையில் தொழிலைச் சிறப்பாகச் செய்து, நடைமுறையில் நல்லவிதமாக அவர்கள் நடந்துகொள்ளாத காரணத்தினால், துறை சார்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 10–55

இதுபோன்ற நிகழ்வுகள் நிகழாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்துக்கொள்வார் என்றால், அவர் வேண்டியிருக்கிறபடி விசைத்தறி நெசவாளர்களுக்கான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரத்தைச் சுற்றியிருக்கிற கிராமங்கள் நெசவாளர்கள் நிறைந்திருக்கின்ற பகுதி. குடியாத்தம் முழுக்க முழுக்க நெசவாளர்கள் இருக்கிற ஊர். ஒரு வரலாற்று செய்தியைச் சொல்கிறேன். இன்றைக்கு பறந்துகொண்டிருக்கிற தேசியக்

2020 மார்ச் 17]

கொடியை இதே குடியாத்தத்திலிருக்கிற நெசவாளர்கள் நெய்துதான் புதுதில்லிக்கு அனுப்பினார்கள். அந்தக் கொடிதான், சுதந்திரம் பெற்றபோது செங்கோட்டையில் ஏற்றப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவு பெருமை வாய்ந்த நெசவாளர்கள் இருக்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் ஒரு தொழில்பூங்காஅமைக்கவேண்டுமென்றுநீண்டநெடுநாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன் அவர்களுடைய கேள்விக்கு பதிலளிக்கிறபோது, Matching grant வேண்டுமென்று கேட்டார்கள். அவர்களே நசிந்து போய் இருப்பவர்கள், வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருப்பவர்கள். அவர்களிடம் Matching grant வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்கு எந்த grant–ம் தெரியாது. நாம்தான் அவர்களுக்காக உதவி செய்ய வேண்டும். நசிந்தவர்களுக்கு உதவுவதற்காகதான் அரசாங்கம் இருக்கிறது. ஆகையினால், அரசே அந்த Matching grant–ஐக் கொடுத்து, குடியாத்தத்தில் நெசவுப் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகுபேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நம்முடைய குடியாத்தம் தொகுதியில் ஜவுளிப் பூங்கா ஒன்றை அரசே உருவாக்கித் தருமா என்கிற ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் என்ன விதிமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அதே விதிமுறைகளின் அடிப்படையில்தான் இப்போதும் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 49 சதவிகித நிதி உதவி நெசவாளர் பெருமக்களுக்காக வழங்கப்படுகிறது. அந்தப் பூங்கா அமைப்பதற்கு உரிய அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்குமேயானால், அதையும் கொடுப்பதற்கு அரசு முன்வந்திருக்கிறது. பத்திரப் பதிவு இலவசமாக செய்து கொடுப்பதற்கும் அரசு முன் வருகிறது. இதுபோன்ற பல்வேறு சலுகைகள், அணுகு சாலைகள் அமைத்துக் கொடுப்பது, மின் வசதிகள் செய்து கொடுப்பது, குடிநீர் வசதி செய்து கொடுப்பது போன்ற உதவிகளில் என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ அனைத்து வசதிகளையும் செய்வதற்கு அரசு முன்வருகிறது. உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கு, மாண்புமிகு உறுப்பினர்களாக இருப்பவர்கள், முதலீட்டாளர்கள்,

முன்வருபவர்கள், 51 சதவிகித பங்குத் தொகை போட்டால்தான், அவர்களுக்கே அது சொந்தமாக அமைந்து, தொழிலை சிறப்பாகச் செய்து, இலாபத்தை ஈட்டுவதோடு, நாட்டுக்கும் உற்பத்தியைத் தருகிற நற்செயல் நடைபெறும் என்பதால், இந்த நிலையில் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

112—

அரசு இணையதளத்தில் பதிவேற்றம்

***48612—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, கிளியூர் ஊராட்சி, கிழவிளாங்குளத்தில் வசிக்கும் விவசாயிகளுக்குச் சொந்தமான 100 ஏக்கர் விவசாய நிலத்தை அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிமாவட்டம், திருவெறும்பூர்வட்டம்(ஊரகம்) நில ஆவணங்கள் முழுமையாக இணையவழிப்படுத்தப்பட்டுள்ளன. அவை, முழுமையாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, 6–11–2015 ஆம் நாள் முதலே இணையவழிப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.